# மார்ச் 19 நடப்பு நிகழ்வுகள்

*(TNPSC, SSC, BANK, UPSC, RAILWAY)*

Visit Us - https:// tamil.examsdaily.in

Face book - ExamsDaily Tamil

## தமிழகம்

### அரசு விரைவு பேருந்துகள் நின்று செல்ல 50 புதிய நிறுத்தங்கள் ஏற்படுத்த முடிவு

- தமிழகத்தில் பல்வேறு இடங்களில் பயணிகளை ஏற்றி, இறக்கிவிட வசதியாக அரசு விரைவு பேருந்துகளுக்கு 50 புதிய நிறுத்தங்கள் விரைவில் தேர்வு செய்யப்படுகிறது.
- இதில், சென்னையில் 7 புதிய நிறுத்தங்களும் இடம் பெறுகின்றன.

### திருப்போரூர் பேரூராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டம்

- திருப்போரூர் பேரூராட்சி செயல் அலுவலர் மத்தியாஸ் தீவிர முயற்சியால், திடக்கழிவு மேலாண்மை திட்டம் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.
- மேலும், உரக்கிடங்கில் காலியாக இருந்த 4 ஏக்கர் நிலத்தை தூய்மைப்படுத்தி பூசணி, முள்ளங்கி, பச்சை மிளகாய், அவரை, கத்தரி, தக்காளி ஆகிய காய்கறி செடிகள் பயிரிடப்பட்டுள்ளன.
- இந்த செடிகளுக்கு இங்கு தயாரான மண்புழு உரத்தையே இட்டுள்ளனர். இதில், நல்ல மகசூல் கிடைத்துள்ளது.

### திமுக ஆய்வு கூட்டம் ஏப். 2-ல் மீண்டும் தொடக்கம்

- சட்டப்பேரவை பட்ஜெட் கூட்டத்தொடர் காரணமாக ஒத்திவைக்கப்பட்ட திமுக நிர்வாகிகளின் கள ஆய்வுக் கூட்டம், ஏப்ரல் 2-ம் தேதி மீண்டும் தொடங்குகிறது.
- ஆர்.கே.நகர் இடைத்தேர்தல் தோல்வியைத் தொடர்ந்து கட்சிப் பணிகள், நிர்வாகிகளின் செயல்பாடுகள் குறித்து ஆய்வு நடத்த திமுக செயல் தலைவர் மு.க.ஸ்டாலின் முடிவு செய்தார்.

## இந்தியா

### ராஜஸ்தான் போலீஸார் திட்டம்

- குற்றவாளிகளை அடையாளம் காண ஆதார் தகவல்களைப் பயன்படுத்த ராஜஸ்தான் போலீஸார் முடிவு செய்துள்ளனர்.

### முதியோருக்கு எதிரான குற்றச்செயல்களில் 3-வது இடத்தில் தமிழ்நாடு

- நாடு முழுவதும் முதியவர்களுக்கு எதிரான குற்றச்செயல்களில் மகாராஷ்டிரா, மத்தியபிரதேசம் ஆகிய 2 மாநிலங்கள் 40 சதவீதத்துடன் முன்னிலை வகிக்கின்றன.
- தமிழ்நாடு 3-ம் இடத்தில் உள்ளது.

## உலகம்

### ரஷ்ய அதிபர் தேர்தல் முடிவு

- ரஷ்யாவில் அதிபர் தேர்தலில் பதிவான வாக்குகள் எண்ணப்பட்டு வரும் நிலையில், தற்போதைய அதிபர் புதின் பெருவாரியான வாக்குகள் வித்தியாசத்தில் முன்னிலை பெற்றுள்ளார்.
- அவர் வெற்றி பெற்று 4வது முறையாக அதிபராவது மீண்டும் உறுதியாகியுள்ளது.

### உலகின் மிகச் சிறந்த ஆசிரியர்

- இங்கிலாந்தைச் சேர்ந்த 39 வயது ஆண்ட்ரியா ஜ.ஃபிராகவ் உலகின் மிகச் சிறந்த ஆசிரியர் என்ற பட்டத்தைப் பெற்றிருக்கிறார்.
- இவருக்குச் சுமார் 6.5 கோடி ரூபாய் பரிசாக வழங்கப்பட்டிருக்கிறது!

## வணிகம்

### பேட்டரி கார் உற்பத்தியை அதிகரிக்கிறது ஃபோக்ஸ்வேகன்

- வாகன புகை வழக்கில் சிக்கி சர்வதேச அளவில் மிகுந்த நெருக்கடிக்கு ஆளான ஃபோக்ஸ்வேகன் குழுமம் பேட்டரி கார் தயாரிப்பை அதிகரிக்க திட்டமிட்டுள்ளது.
- உலகம் முழுவதும் தற்போது இந்நிறுவனத்துக்கு உள்ள ஆலைகளில் மூன்றில் மட்டுமே பேட்டரி வாகனங்கள் தயாரிக்கப்படுகின்றன.
- 16 ஆலைகளில் பேட்டரி வாகனங்களை தயாரிக்க நிறுவனம் திட்டமிட்டுள்ளது.

## 6 கியர்களில் மாருதி ஸ்விப்ட்

- 6 கியர்களைக் கொண்ட ஸ்விப்ட் உருவாக்கும் பணிகள் துரித கதியில் நடைபெறுகின்றன.
- இது வாகனத்தின் செயல் திறனை மேலும் மேம்படுத்தும் என நிறுவனம் தெரிவித்துள்ளது.
- இந்த ஆண்டில் (2018) இந்த வாகனம் சந்தைக்கு வரும் என்று தெரிகிறது.

## மத்திய அரசு திட்டம்

- வங்கிகளில் கடன் வாங்கிவிட்டு வெளிநாடு செல்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வரும் சூழலில் இதனைத் தடுப்பதற்கு மத்திய அரசு பல நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.
- இதில் ஒரு நடவடிக்கையாக நிறுவனங்களின் இயக்குநர் குழுவில் இருக்கும் அனைவரது பாஸ்போர்ட் தகவல்களைச் சேகரிக்க மத்திய அரசு திட்டமிடுவதாக தெரிகிறது.

## விளையாட்டு

## பாட்மிண்டன் அரை இறுதியில் சிந்து தோல்வி

- இங்கிலாந்தின் பர்மிங்ஹாம் நகரில் நடைபெற்று வரும் ஆல் இங்கிலாந்து பாட்மிண்டன் போட்டியின் மகளிர் ஒற்றையர் அரை இறுதியில் இந்திய வீராங்கனை பி.வி. சிந்து தோல்வி கண்டார்.

---***---